**பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு - 2013**

---

பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 யூன் 03 ஆந் திகதிய அமப/10/0958/438/001 இலக்க அமைச்சரவை அங்கீகாரத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினை தாபித்தல்

கடற்தொழில் மற்றும் நீரியல்வள அமைச்சரினால் 2010 மே 14 ஆந் திகதி முன்வைக்கப்பட்ட பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினை தாபிப்பதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் 2010 யூன் 03 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன் தீர்மானத்தின் பிரகாரம் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பானது 2015 மார்ச் 27 வரையிலும் நியதிச்சட்ட நிறுவகமொன்றாக சட்டவாக்கப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாக பாதிக்கப்படலாம்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நியம இலக்கம் 01**

141 பந்தி

(அ) சொத்துக்களின் கொண்டுசெல்லும் பெறுமதியினை நிச்சயிக்கும் போது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எதிர்பாராத நிகழ்வுகளின் தாக்கம் மதிப்பிடப்பட வேண்டுமெனினும் ரூபா 87,951,000 பெறுமதியான பெற வேண்டிய கடைக் கூலி வருமானமானத்தினடிப்படையில் ஏற்படக்கூடிய ஐயக்கடன தொடர்பில் கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டினுள் அறவிடப்பட வேண்டிய 10,280,000 கடை கூலியானது நம்பிக்கை பொறுப்பின் அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) மேலும், 2011 மற்றும் 2012 ஆண்டுகளுக்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 22,544,215 தொகையான கடை கூலி வருமானத்தின் அறவீடானது நிச்சயமற்றதெனினும் ஐயக்கடனுக்காக கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் பெறவேண்டிய வருமானமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்

சொத்தொன்று அதன் ஆயுட்காலம் முழுவதும் தேய்வடையும் விதத்தில் நிறுவனத்தின் பெறுமானத்தேய்வு கொள்கையானது தீர்மானிக்கப்பட வேண்டுமெனினும், ஆண்டின் சனவரி 01 ஆந் திகதியில் நிலவும் சொத்துக்களின் பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத்தேய்விடல் நம்பிக்கைப் பொறுப்பின் பெறுமானத் தேய்வு கொள்கையாக இருந்தமையினால் ஆண்டினுள் கையேற்கப்பட்டு பயன்படுத்தப்படும் சொத்துக்களுக்காக அவ் வருடத்தில் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்படாமை நிதிக்கூற்றுக்களில் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையொன்றினை பிரதிபலிக்காமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 10,470,363 தொகையான போதிலும் அது ரூபா 9,632,734 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் பற்றாக்குறையும் அதற்குச் சமமான அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், வட்டி வருமானமானத்தினை கணக்கு வைக்கும் போது அதற்குரிய ரூபா 837,629 தொகையான நிறுத்தி வைத்தல் வரி கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டில் ரூபா 771,049 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கழிவுப் பொருள் தாங்கி அவ் ஆண்டிலேயே அகற்றப்பட்டிருந்த போதிலும் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் மீளாய்வாண்டினுள் அதற்காக ரூபா 23,132 பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியதாக இருந்த ரூபா 18,250 தொகையான நலன்புரி செலவினம் மற்றும் ரூபா 233,478 தொகையான ஆராய்ச்சி செலவினம் என்பவற்றுக்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆறு புதிய விற்பனைக் கூடங்களுக்கு மின் விநியோகத்தினைப் பெற்றுக்கொடுப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 433,950 தொகையினை முலதனமாக்குவதற்கு பதிலாக கட்டிட மீள்திருத்தல் மற்றும் பராமரிப்பு செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) வியாபார நடவடிக்கைகளுக்காக இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த பனிக்கட்டி உற்பத்தி நிலையம் மற்றும் 04 விற்பனை நிலையங்களுக்காக மீளாய்வாண்டிற்கான அறவிடப்பட வேண்டிய ரூபா 5,148,000 தொகை பெற வேண்டிய வாடகை வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்கு பதிலாக முகாமைத்துவ கட்டணங்கள் என்ற செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 தொங்கல் கணக்குகள்

வங்கியொன்றிற்கு நேரடியாக கிடைக்கப்பெற்றிருந்த வருமானங்களை குறிப்பாக இனங்காண முடியாமையின் காரணத்தால் தொங்கல் வருமான கணக்கொன்றிற்கு செலவு வைக்கப்பட்டு வருட இறுதியில் பெறவேண்டிய வாடகை வருமானத்தில் முறையற்ற விதத்தில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வருட வருமானத்தின் உண்மையான அளவானது கணக்கு வைக்கப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் இம் மீதி ரூபா 1,626,000 ஆக இருந்தது.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விடயங்களின் எதிரேயும் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படாமையின் காரணத்தால் அவற்றை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ளவோ சான்றுறுதிப்படுத்தவோ இயலாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) மீளச்செலுத்தும் பிணை வைப்புக்கள் | 1,736,681 | வைப்பு உரிமையாளர்களின் விபரம் |
| (ஆ) செயற்பாடாத விற்பனை நிலையங்களுக்குரிய வாடகை | - | விற்பனை நிலையம் தொடர்பான விபரம் |
| (இ) சுத்திகரிப்பு சேவைகளை வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பட்டியல்கள் | 2,840,158 | கம்பனியால் நம்பிக்கை பொறுப்பிற்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கு தொடர்பான விபரம் |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் கீழ் முன்னைய வருடம் வரை இருந்த ரூபா 1,546,494 கூட்டுத்தொகையான நான்கு மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியிலான மொத்த நடைமுறை சொத்துக்களில் 88 சதவீதமாது ரூபா 66,223,408 தொகையான பெறவேண்டிய வாடகை வருமானமாவதுடன், கடை வாடகை சேகரித்தல் தொடர்பில் முகாமைத்துவத்தின் அவதானமானது நலிவடைந்த நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடமைகளைக் மேவுகை செய்வதற்காக நியமிக்கப்பட்ட கடற்றொழில், நீர்வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் திட்டமிடல் பெண் உதவியாளருக்கு தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.5 உப பிரிவிற்கு முரணாக 2011 ஆம் ஆண்டில் 9 மாதங்கள் 15 நாட்களுக்காக ரூபா 212,500 தொகையான படி செலுத்தப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் மாதத்தில் நிர்வாக இணைப்பாளர் பதவியின் கடமைகள் குறித்த உத்தியோகத்தரின் கடமைப்பட்டியலில் சேர்க்கப்பட்டதன் பின்னர் அந்த சாதாரண கடமைகளை நிறைவேற்றுவதற்காக படியொன்றினை செலுத்த முடியாதிருந்த போதிலும் 2013 திசெம்பர் வரை ரூபா 570,000 தொகை அந்த உத்தியோகத்தருக்குப் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) குறித்த பெண் உத்தியோகத்தருக்கு நிர்வாக இணைப்பாளர் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சின் செயலாளரால் வாரமொன்றிற்கு 03 தினங்கள் கடமை விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் நம்பிக்கை பொறுப்பின் விரலடையாள இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவு செய்யப்பட்டிருக்காமையின்

காரணத்தால் குறித்த தினங்களின் அவ் உத்தியாகத்தரின் கடமை வருகையினை உறுதிப்படுத்த இயலாதிருந்தது.

(இ) இப் பெண் உத்தியோகத்தருக்கு 13/2008(iv) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக மாதமென்றிற்கு 120 லீட்டர் என்ற எரிபொருள் கொடுப்பனவொன்றினை செலுத்துவதற்கு செயலாளர் அங்கீகாரமளித்திருந்ததுடன் எரிபொருள் கொடுப்பனவாக 2013 நவம்பர் முதல் 2014 நவம்பர் வரையான காலப்பகுதிக்கு ரூபா 188,400 செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பு திருத்தச்சட்டம் 8(அ) பந்தி | முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்புக் கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாயினும் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக 05 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு | ‘‘நம்பிக்கைப் பொறுப்பு’’ வருமானவரிக் கடப்பாட்டிற்கு உட்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2013 இன் 17 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச் சட்டம் | |
| 10 பந்தி | நம்பிக்கை பொறுப்பு பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 22 (2) பந்தி | (i) நம்பிக்கை பொறுப்பின் உள்ளீட்டு வரிக்கான வரி செலவினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. <br> (ii) உள்ளீட்டு அடிப்படையில் செலுத்தப்படும் பெறுமதிசேர் வரி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 | (i) பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் |

2013 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையானது 2014 நவம்பர் 11 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) சிற்றுண்டிச் சாலைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 275,249 கிரயமான 04 உபகரணங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

நிதிப்பிரமாணம் 396 (ஈ)

2011 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இதுவரையில் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 294,250 பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பில் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(உ) 2006 சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டிக் கோவை வழிகாட்டிக் கோவை இலக்கம் - 3.2

(i) கொள்வனவு செயற்பாடுகளை பின்பற்றாமல் சந்தைத் தொகுதியின் சுற்றாடலை சுத்தம் செய்யும் சேவையானது தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனத்துடன் 2012 பெப்ரவரி 14 ஆந் திகதி முதல் 2017 பெப்ரவரி 13 ஆந் திகதி வரை 5 வருடங்கள் வரையான நீண்ட காலத்திற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ii) சுத்தம் செய்யும் போது உயர் அழுத்தம் கொண்ட நீர் விசிறும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற நிபந்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமையின் காரணத்தால் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக சாதாரண நீர்க்குழாய்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதனால் அதிக நீர் பாவனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆதலால் மீளாய்வாண்டின் நீர்ப்பாவனை கிரயம் ரூபா 7,948,948 ஆக இருந்தது.

(iii) உடன்படிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் சுத்திகரிப்பிற்காக தொழிலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் மாதமொன்றிற்கு 1110 மனித நாட்கள் எனும் படி

ஈடுபடுத்தப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது மாதாந்தம் 171 – 328 இற்கு இடைப்பட்ட அளவில் குறைவாக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| (ஊ) 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பிஎவ்/423 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 04.1 ஆம் பந்தி | நம்பிக்கை பொறுப்பின் வருடாந்த பாதீடானது முன்னைய வருடத்தின் செப்தெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டு செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பின் நிதி விளைவுகள் ரூபா 25,873,482 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 863,735 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 25,009,747 ஆன வீழ்ச்சியினை காணக்கூடியதாக இருந்தது. வாடகை வருமானம் ரூபா 20,536,000 இனால் குறைவடைந்தமை மற்றும் முகாமைத்துவ கட்டணங்கள் ரூபா 5,148,000 இனாலும் கட்டிட பராமரிப்பு செலவினம் ரூபா 1,290,000 இனாலும் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கு காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

சந்தைத் தொகுதியை தாபிப்பதற்கு தேவையான சொத்துக்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 2,073,693,568 ஆக இருந்ததுடன் நம்பிக்கைப் பொறுப்பை உருவாக்கி சந்தைத் தொகுதியின் முழுமையான கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்றல், அத்தொகுதியை செயற்திறனாக செயற்படுத்துதல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் அதற்கு இணையான விடயங்கள் பற்றி நடவடிக்கை எடுத்தலுமே அதன் இலக்கு மற்றும் செயற்பாடுகளாக இருந்தது. அதற்குரிய கணிசமான பொறுப்புக்கள் நம்பிக்கைப் பொறுப்பிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் நம்பிக்கைப் பொறுப்பின் சகல வருமானங்களையும் உரிய பிரகாரம் அறவிடுவதலும், செலவினங்களை முறையாக முகாமைத்துவம் செய்தலும் நடைபெற வேண்டுமெனினும் அச்செயற்பாடுகளை உரிய பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பினால் முடியாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

**(அ) வாகனத் தளத்தின் வருமானங்கள் சேகரித்தல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

(i) சந்தைத் தொகுதியின் சுற்றாடலில் வாகனத் தளத்தின் வருமானத்தை சேகரிக்கும் நடவடிக்கைககள் நம்பிக்கைப் பொறுப்பினால் இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனம் அந்த செயற்பாடுகளுக்காக மூன்றாம் தரப்பினரான கம்பனியொன்றுடன் நம்பிக்கைப்

பொறுப்பின் அங்கீகாரமின்றி 10 வருட நீண்ட கால உடன்படிக்கையொன்றினை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) உடன்படிக்கைக்கு சட்டமா அதிபரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) கம்பனியினால் சேகரிக்கப்படுகின்ற வருமானத்தில் கழிக்கப்படக்கூடிய செலவினம் பற்றி உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் நம்பிக்கைப் பொறுப்பிற்கு வருமானத்தை அனுப்பும் போது ஊழியர் சம்பளம் ரூபா 1,428,917 இனால் கூடுதலாக கழிக்கப்பட்டதன் காரணமாக நம்பிக்கைப் பொறுப்பினால் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 428,675 ஆக இருந்தது.

(iv) கம்பனியின் 2012/2013 மற்றும் 2013/2014 ஆம் ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ரூபா 5,618,204 தொகை முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் வாகனத் தரிப்பிட வருமானத்தின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(v) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரியதாக கம்பனி அறவிட்டு இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்பட்ட வருமானத்தில் நம்பிக்கைப் பொறுப்பில் சாட்டப்படக்கூடிய ரூபா 18,398,680 தொகையை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) சந்தைத் தொகுதியின் சுற்றாடலில் வாகனத் தளத்தை நாளாந்தம் பயன்படுத்துகின்ற வியாபாரிகளுக்காக விநியோகிக்கப்பட்ட அங்கத்துவ அட்டைக் கட்டணங்களுக்குரிய கம்பனியின் வருமான அறிக்கைகளின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பின் வருமானம் ரூபா 265,185 ஆக இருந்ததுடன் இவ் வருமானத்தின் சரியான தன்மையினை உறுதிப்படுத்தக்கூடிய செயன்முறையொன்று நம்பிக்கை பொறுப்பினால் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டினுள் 1,366 வாகனங்களுக்காக அங்கத்துவ அட்டைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ் வாகனங்களுக்காக மாதாந்தம் அங்கத்துவ அட்டைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டதெனின் நம்பிக்கை பொறுப்பிற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தின் பாகம் ரூபா 22,136,400 ஆகும்.

**(ஆ) கடைகளின் வாடகை வருமானம் முறையாக அறவிடப்படாமை காரணமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.**

(i) 128 கடைகளுடன் நிர்மாணிக்கப்பட்ட சில்லறை சந்தைத் தொகுதியின் 64 கடைகள் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 9,625,540 செலவில் மொத்த வியாபாரக் கடைகளாக ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 27 வரையிலும் இந்த 64 கடைகளும் சில்லறைக் கடைகளாகக் காணப்பட்ட 64 கடைகளில் 34 கடைகளும் செயற்பாடற்றிருந்தன.

(ii) மதிப்பீட்டு திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த மதிப்பீட்டு பெறுமதிக்கு வியாபார நிலையங்களிடமிருந்து வாடகை அறவிடுவதற்கு நம்பிக்கை பொறுப்பு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இதன் காரணமாக நம்பிக்கைப் பொறுப்பினால் இழக்கப்பட்ட வாடகை வருமானம் ரூபா 36,960,000 ஆக இருந்தது.

(iii) நம்பிக்கை பொறுப்பிற்குரிய சொத்துக்களை வாடகைக்கு வழங்கும் போது மீள செலுத்தப்படும் பிணை வைப்பொன்றினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருந்ததெனினும், ரூபா 14,020,000 கூட்டுத்தொகையான பிணை வைப்புக்களை உரிய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அச் சொத்துக்களுக்கு ஏற்படக்கூடிய சேதங்களை பெற்றுக்கொள்ளுதல் அல்லது

வாடகையினை அறவிடுதல் தொடர்பிலான எச்சரிக்கையினை நம்பிக்கை பொறுப்பிற்கு ஏற்க வேண்டியிருந்தது.

(iv) சில்லறைச் சந்தைத் தொகுதிக் கட்டிடத்தை வாடகைக்கு வழங்குவதற்காக நிர்மாணிக்கப்பட்ட மாதாந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 14,000 படியான 16 விற்பனைக் கூடாரங்களில் 02 விற்பனைக் கூடங்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாவனைக்காகவும் ஒரு விற்பனைக் கூடம் சிற்றுண்டிச்சாலை ஊழியர்களின் பாவனைக்காகவும் கட்டணம் அறவிடப்படாமல் வழங்கப்பட்டிருந்தன.

(இ) சந்தைத் தொகுதியின் சுற்றாடலில் அமைந்துள்ள சில கட்டிடங்களின் அத்திவாரங்களின் கொங்கிரீட் தட்டின் கீழ் நிலம் கீழிறங்கி நீர் நிறைந்திருந்ததுடன் சுற்றாடலிலுள்ள நிலம் மற்றும் வீதிகளில் ஆங்காங்கே கீழிறங்கி கழிவு நீர் நிறைந்திருந்தது. இங்கு கட்டிடங்கள் கீழிறங்கும் அவதானம் தொடர்பில் பரிசோதனை செய்து அறிக்கையொன்றினை பெற்றுக்கொள்வதற்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்திற்கு மீளாய்வாண்டினுள் ரூபா 628,120 செலுத்தப்பட்டிருந்ததெனினும் நிலத்தினை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் குறித்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பெண் உத்தியோகத்தர் அங்கீகாரமின்றி பெற்ற 50 நாள் விடுமுறைகள் சம்பளமற்ற விடுமுறையாகக் கருதி சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

---

(அ) கழிவுப் பொருள் தாங்கியொன்றை நிர்மாணித்தல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சந்தைத் தொகுதியில் இருந்து அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களை உலர வைத்து தூளாக்கி விற்பனை செய்வதற்காக தனியார் நிறுவனமொன்றினால் அவர்களின் செலவில் இயந்திரகூடங்களை உள்ளடக்கிய கட்டிடமொன்றை தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) கட்டிடத்தின் கட்டுமானம் தொடர்பில் குறித்த நிறுவனத்துடன் வாடகை உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடவும் நிலத்திற்கான குத்தகை வாடகையினை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிற்றுண்டிச்சாலையை வாடகைக்கு விடல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி இலக்கம் 3.2 இற்கு முரணாக சிற்றுண்டிச்சாலை 2011 ஏப்ரல் 01 ஆந் திகதி தொடக்கம் 10 வருட காலத்திற்காக ரூபா 129,000 தொகையான மாதாந்த வாடகையில் தனியார் தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,143,868 பெறுமதியான 03 குளிரூட்டிகள் பாவனைக்கு எடுக்கப்படாமல் சிற்றுண்டிச் சாலையில் காணப்பட்டன.

### 4.3 வெளிப்படையான முறைகேடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சந்தைத் தொகுதிக்கு பாதுகாப்பு வழங்குகின்ற தனியார் பாதுகாப்புச் சேவை கம்பனி பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக ஒரு சேவை தடவைக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 9 - 12 இடையிலான அளவில் ஈடுபடுத்தப்பட்டு 24 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2011 யூன் 01 தொடக்கம் 2013 ஒக்தோபர் 31 வரையான காலப்பகுதியில் பிழையாக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 15,399,050 ஆக இருந்ததுடன் அதற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியாக (வற்) ரூபா 1,884,954 தொகை மற்றும் தேசத்தைக் கட்யெழுப்பும் வரியாக ரூபா 307,999 தொகையும் அந்தக் கம்பனிக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையிலும் வெளிப்படுத்தப்பட்டதெனினும் உரிய கவனமின்றி நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கும் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை பாதுகாப்பு சேவைக் கம்பனியிலிருந்து அறவிடுவதற்கும் 2015 மார்ச் 27 வரையிலும் நம்பிக்கை பொறுப்பினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணத்தால் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் நம்பிக்கை பொறுப்பின் பற்றாக்குறை முறையே ரூபா 4,271,262, ரூபா 6,686,981 மற்றும் ரூபா 6,634,659 இனால் அதிகரித்திருந்தது.

(ii) முறையான ஒப்பந்தமொன்று இல்லாமல் சேவையினை வழங்கியிருந்த இந்த கம்பனியுடன் 2011 மார்ச் 31 தொடக்கம் 2015 மார்ச் 30 வரை 4 வருட காலப்பகுதியை உள்ளடக்கும் வகையில் 2014 சனவரி 08 ஆந் திகதி நம்பிக்கைப் பொறுப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததெனினும் சந்தைத் தொகுதியின் வளவிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டிய இடங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைகள் தீர்மானிக்கப்பட்டு அது தொடர்பான நிபந்தனைகள் அந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவும் இல்லை.

### 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சந்தைத் தொகுதியின் இருப்பு கட்டிட தொகுதியின் தளத்தில் நிறப்பூச்சு பூசுவதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு 2013 யூன் 10 ஆம் திகதி முற்பணமாக ரூபா 1,289,904 தொகை செலுத்தப்பட்டதன் பின்னர் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் யூலை 11 ஆம் திகதியாகும் போது நிறப்பூச்சு நீங்கியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததெனினும் 2013 யூன் 17 ஆம் திகதி மற்றும் 2013 ஆகத்து 14 ஆகிய தினங்களில் முதலாவது மற்றும் இரண்டாவது இடை கொடுப்பனவுகளும் தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவர் அல்லது பொறியியலாளரொருவரின் சான்றிதழொன்றின்றி செலுத்தப்பட்டிருந்தது. மேலும், முதலாவது இடை கொடுப்பனவு உறுதிச்சீட்டு மேற்கொண்ட இலக்கம் 549 ஆம் இலக்க ரூபா 1,200,000 தொகையான கொடுப்பனவு சீட்டு அங்கீகரிக்கப்பட்டிராததுடன், முழுமையாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,902,280 தொகையில் செயலாற்றல் பிணையின் பெறுமதியான ரூபா 930,000 மாத்திரம் மீளளிக்கப்பட்டிருந்தமையால் நம்பிக்கை பொறுப்பிற்கு ரூபா 1,972,280 நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 4.5 பதவியணியினர் நிர்வாகம்

சந்தைத் தொகுதியின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திலிருந்து 41 பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் நம்பிக்கைப் பொறுப்பின் பதவியணியினர்களின் தேவை தீர்மானிக்கப்பட்டு பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் ஒழுங்கமைப்பு அட்டவணையைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதி பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாத காலத்திற்குள் நிதியத்தின் நிதி அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 இன் நிதியாண்டிற்காக முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு 11 மாத தாமதத்தின் பின்னர் 2015 சனவரி 21 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 செயல்நடவடிக்கை திட்டம்

நம்பிக்கை பொறுப்பினால் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வு அறிக்கைகளை உள்ளடக்கிய கணக்கு அறிக்கைகள் நம்பிக்கை பொறுப்பு சபையினால் கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வெளியிடப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதிலளித்தல் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது. 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த 17 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2015 மார்ச் 31 வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சுச் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) இருப்பு கட்டுப்பாடு

(இ) மீளளிக்க வேண்டிய வைப்புக்கள்